# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க,
## காடு (திருத்தம்) சட்டம்

*(2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2009, நவெம்பர் மாதம் 20 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 45.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

# காடு (திருத்தம்)

ச.வ.-ஓ. 64/2000

## காட்டுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, காட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

451 ஆம் அத்தியாயத் துக்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்.

**2.** (இதனகததுப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) காட்டுக் கட்டளைச் சட்டத்தின் விரிவுப் பெயர் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப் பெயர் இடப்படுகின்றது :-

> “காட்டு மூலவளங்களைப் பேணுதல், பாதுகாத்தல் மற்றும் அவற்றின் நிலைகொள்ளச் செய்தகு முகாமைத்த்துவம் மற்றும் காட்டு விளைபொருளைப் பயன்படுத்துதல் என்பன தொடர்பான சட்டத்தைத் திரட்டுதவதற்கும் திருத்துவ தற்கும் ; வெட்டுமரத்தையும் காட்டு விளைபொருளையும் இடம்பெயர்த்தலையும் அத்தகைய இடம்பெயர்த்தலுடன் தொடர்புபட்ட ஏனைய செயற்பாடுகளையும் ஒழுங்கு படுத்துவதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.”.

முதன்மைச் சட்டவாக்கத் துக்கான பொதுவான திருத்தங்கள்.

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும், வேறேதேனும் எழுத்தி லான சட்டத்திலும்,-

(அ) “காட்டுக் கட்டளைச்சட்டம்” என்னும் சொற்களுக்குப் பதிலாகக் “காடு பேணற் கட்டளைச் சட்டம்” என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும் ;

(ஆ) “காட்டுக் காப்பாளர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “காடு பேணுநர்-தலைமையதிபதி” என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

2-PL 004319 -650 (2009/08)

(2) ஏதேனும் ஒழுங்குவிதியில், விதியில், அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், கடிதத்தொடர்பில் அல்லது வேறு ஆவணத்தில் "காட்டுக் கட்டளைச்சட்டம்" மற்றும் "காட்டுக் காப்பாளர்" என்பவற்றுக்கான ஒவ்வொரு குறிப்பீடும், முறையே "காடு பேணற் கட்டளைச் சட்டத்துக்கும்", "காடு பேணுநர் தலைமை யதிபதிக்கும்" ஆன குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் தலையங்கத்தை மாற்றீடு செய்தல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் II ஆம் அத்தியாயம் என்னும் சொல்லையும் எண்ணையும் உடனடுத்துக் காணப்படுகின்ற தலையங்கம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் தலையங்கம் இடப்படுகின்றது :-

"ஒதுக்குக்காடுகள் மற்றும் பேணற்காடுகள் பற்றி"

*முதன்மைச் சட்டவாக்கதின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவை, அதன் (1) ஆம் உட்பிரிவாக மீளஇலக்க மிடுவதன் மூலமும் ;

(2) மீளஇலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, காடு பேணுநர்-தலைமை யதிபதியானவர், உயிரியல் வேறுபாடுகளையும், மண்ணையும் நீரையும் பேணும் நோக்கங்களுக்காகவும், அதன் தனித்தன்மை வாய்ந்த சூழலியல் முறைமை யையும், பிறப்பு ரீதியிலான வளங்களையும், அரிதான வையும் மற்றும் இடஞ்சார்ந்தவையுமான இனங்களைச் சேர்ந்த தாவரங்களினதும் விலங்குகளினதும் வாழிடத் தையும் பேணிக்காப்பதற்காகவும், விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் ஒதுக்குக் காடுக ளுக்கான முகாமைத் திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(3) காடு பேணுநர்-தலைமையதிபதி அல்லது அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர், எந்த ஒதுக்குக் காடுகள் தொடர்பில் முகாமைத் திட்டம் தயாரிக்கப்பட்டதோ அந்த ஒதுக்குக் காடுகளுக்காக, (2) ஆம் உப்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில், அத்தகைய முகாமைத் திட்டத்தைச் செயற்படுத்துதல் வேண்டும்.

(4) பின்வருவன தொடர்பில் முழுமையான அல்லது ஒரு குறித்துரைக்கப்பட்ட ஒதுக்குக் காட்டு இடப்பிரதேசத்திற்கு ஏற்புடையதாகும் வகையில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்குதல் வேண்டும் :-

(அ) ஒதுக்குக் காடுகளின் நிருவாகமும் முகாமையும்;

(ஆ) முகாமைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கருமங்களும், அத்தகைய முகாமைத் திட்டத்தைத் தயாரிப்பதிலும் செயற்படுத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய செயல்முறையும் நடவடிக்கை முறையும் ;

(இ) ஒதுக்குக் காடுகளின் நிலைகொள்ளச் செய்தகு முகாமையில் சமுதாயத்தின் மற்றும் அரசசார்பற்ற துறையின் பங்குபற்றுகையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துக்காக முகாமை உடன்படிக்கைகளைத் தயாரித்தல் ;

(ஈ) இவ்வுட்பிரிவின்கீழ் செயற்படுத்தப்படும் செயற்பாடுகள் தொடர்பில் கட்டணங்களை அல்லது இறுப்பனவுகளை அறவிடுதல் ; இவை, எல்லா விடயங்களிலும், காட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணவகையான அல்லது வேறுவகையான நன்மையின் பெறுமதிக்குச் சமமாகவிருத்தல் வேண்டும். செல்லுபடியானமுறையில் வெளிப்படுத்தப்படாத அத்தகைய ஏதேனும் நன்மை, இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றாகவமைதல்

வேண்டுமென்பதுடன், நீதிமன்றத்தினால் அத்தகைய முறையில் விதிக்கப்பட்ட குற்றப் பணமொன்றென்றாற் போன்று, குறித்துரைக் கப்படக்கூடியவாறாக, இறுக்கப்பட்டு அறவிடப் படுதலும் வேண்டும் ;

(உ) அத்தகைய காட்டடை முகாமை செய்தல் சம்பந்தமாக அத்தகைய உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதலும், அவற்றை இல்லாதாக்கு தலும், நிபந்தனைகளைச் சுமத்துதலும், கட்ட ணங்களை விதித்தலும், பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கான உத்திகளை வகுத்தமைத்தலும்;

(ஊ) முகாமைப் பங்காளர்களுக்கிடையே அல்லது அக்கறை கொண்டுள்ளோருக்கிடையே நன்மை யைப் பகிர்ந்தளிக்கின்ற அமைப்பு முறை யொன்றை அபிவிருத்தி செய்தல் ;

(எ) ஒதுக்குக் காட்டில் எரிபொருளுக்காக வெட்டுமரம் சாரா காட்டு விளைபொருளையும் இறந்துபோன அல்லது வீழ்ந்துகிடக்கும் தடிகளையும் இடப்பிரதேச சமுதாயத்தினர் பயன்படுத்தப்படுவதை அதிகாரமளிப்பதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை ;

(ஏ) ஒதுக்குக் காட்டினுள் கொண்டு நடத்தப்படும் ஏதேனும் செயற்பாட்டுக்கு ஏற்புடையற்பாலன வான நிபந்தனைகள் ; அத்துடன்

(ஐ) எந்த இடப்பரப்புகள் தொடர்பிலும் எந்த நிபந்தனைகளுக்கு அமையவும் ஓர் ஒதுக்குக் காட்டில் அறிவியல் ஆராய்ச்சி அனுமதிக்கப் படலாமோ அந்த இடப்பரப்புகளும் நிபந்தனை களும். ".

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அ என்னும் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவு களைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

"(3) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, காடு பேணுநர்-தலைமையதிபதியானவர், (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட விழுமியங்களைப் பேணிக்காக்கும் நோக்கத்துக்காக, விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில், பேணற்காட்டுக்கான முகாமைத் திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(4) காடு பேணுநர்-தலைமையதிபதி அல்லது அதற்கென எழுத்தில் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர், எந்தப் பேணற் காடுகள் தொடர்பில் முகாமைத்திட்டம் தயாரிக்கப்பட்டதோ அந்தப் பேணற் காடுகளுக்காக, (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, விதித்துரைக்கப்பட்டவாறான முறையில், அத்தகைய முகாமைத் திட்டத்தைச் செயற்படுத்துதல் வேண்டும்.

(5) முகாமைத் திட்டத்தில் எக்கருமங்கள் உள்ளடக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அக்கருமங்கள் தொடர்பிலும் மற்றும் அத்தகைய முகாமைத் திட்டத்தைத் தயாரிப்பதிலும், செயற்படுத்துவதிலும், நிருவகிப்பதிலும் பின்பற்றப்படவேண்டிய முறையும் நடவடிக்கை முறையும் என்பன தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்குதல் வேண்டும்.

(6) அரச காணியல்லாததும், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட சிறப்புக்கூறுகளுள் எவற்றையும் கொண்டுள்ளதுமான ஏதேனும் அசைவற்ற ஆதனம், (1) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ள பேணற் காடொன்று உளதாயிருப்பதற்காகவும் அதனைப் பேணிக்காப்பதற்காகவும் தேவைப்படுமிடத்து, அத்தகைய காணி, அமைச்சரின் விதப்புரையின்மேல் 460 ஆம் அத்தியாயமான காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்படலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஈ என்னும் பிரிவு, "பேணற் காடு" என்னும் சொற்கள் அப்பிரிவில் தோன்றுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, விடயத்துக்கேற்ப, "பேணற் காடு அல்லது ஓர் 'ஒதுக்குக்காடு' " என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவிலும் அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பிலும் உள்ள "ஒதுக்குக் காட்டிலுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு பேணற் காட்டில் உள்ள அல்லது ஒதுக்குக் காட்டிலுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவுக்கான, முறையே, முதலாம் காப்புவாசகத்திலும் இண்டாம் காப்புவாசகத்திலும் "அரசாங்க அதிபரின்" மற்றும் "அரசாங்க அதிபர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிரதேசச் செயலாளரின்" மற்றும் "பிரதேச செயலாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"பேணற் காட்டில் தடை செய்யப்பட்ட செயல்கள்.

6. (1) பின்வரும் நோக்கங்களுக்காகவன்றியும் காடு பேணுநர்-தலைமையதிபதியினால் அல்லது அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழன்றியும், ஆளெவரும், பேணற் காடொன்றினுட் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படலாகாது :-

(அ) ஒரு பேணற் காட்டினுள் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபடுதல் ;

(ஆ) ஒரு பேணற் காட்டில் தாவர விலங்கினங்களை அவதானித்தல் ; அல்லது

(இ) முகாமைத் திட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளைச் செயற்படுத்துதல்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பேணற் காடொன்றில் -

(அ) அத்துமீறுகின்ற அல்லது அத்துமீறச் செய்கின்ற அல்லது அதன்கண் தங்கியிருக்கின்ற ;

(ஆ) ஏதேனும் தாவரத்தை அல்லது மரத்தை வெட்டி வீழ்த்துகின்ற அல்லது ஏதேனும் தாவரத்தை, மரத்தை அல்லது வெட்டுமரத்தை வெட்டுகின்ற அல்லது அறுக்கின்ற அல்லது அத்தகைய தாவரத்தை அல்லது மரத்தை வெட்டி வீழ்த்தச் செய்கின்ற அல்லது ஏதேனும் தாவரத்தை, மரத்தை அல்லது வெட்டுமரத்தை வெட்டச் செய்கின்ற அல்லது அறுக்கச் செய்கின்ற அல்லது ஏதேனும் தாவரத்தை, மரத்தை அல்லது வெட்டுமரத்தை மாற்றுகின்ற, உருமாற்றுகின்ற, சேகரிக்கின்ற, அகற்றுகின்ற அல்லது இடம்பெயர்க்கின்ற அல்லது ஏதேனும் தாவரத்தை, மரத்தை அல்லது வெட்டுமரத்தை அடையாளமிடுகின்ற, தாவரத்தின் அல்லது மரத்தின் கொப்புகளை வெட்டுகின்ற அல்லது பட்டையகற்றி வளையமிடுகின்ற அல்லது ஏதேனும் காட்டு விளைபொருளை தனது உடைமையில், கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற அல்லது அரிமேடையை எழுப்புகின்ற அல்லது மர அறுப்புக்குழியை நிருமாணிக்கின்ற ;

(இ) ஏதேனும் மரத்திலிருந்து பட்டையை அல்லது இலைகளை அகற்றுகின்ற அல்லது ஏதேனும் மரத்திலிருந்து பட்டையை உரிக்கின்ற அல்லது அதன் கிளைகளை வெட்டுகின்ற அல்லது ஏதேனும் மரத்திலிருந்து சாறு வடியச் செய்கின்ற அல்லது அதனை எரிக்கின்ற அல்லது வேறுவிதமாக அதற்குச் சேதமேற்படுத்துகின்ற ;

(ஈ) கால்நடைகளை அத்துமீற அனுமதிக்கின்ற, புல்லை அல்லது வேறு ஏதேனும் தாவரத்தை வெட்டுகின்ற அல்லது அத்தகைய புல்லை அல்லது தாவரங்களைக் கால்நடைகளுக்கு உணவாக ஊட்டுகின்ற;

(உ) அத்தகைய காட்டினுள் உள்ள எவையேனும் நீர்வழிகளைத் தடை செய்கின்ற அல்லது ஒரு நீர்க்குழாய் அல்லது வேறு எவையேனும் உபாயங்கள் மூலம் அத்தகைய நீர்வழியிலிருந்து நீரைப்பெறுகின்ற அல்லது நீரைத் தீழ்ப்பாக்குகின்ற அல்லது நீருக்கு நஞ்சூட்டுகின்ற அல்லது ஏதேனும் குப்பைகூளத்தைக் காட்டில் கொட்டுவதன் மூலமும், கையாண்டு தீர்ப்பதன் மூலமும் காட்டுச் சூழலைத் தீழ்ப்பாக்குகின்ற ;

(ஊ) ஏதேனும் தாவரத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை இடம்பெயர்க்கின்ற, அகற்றுகின்ற, வேரோடு பிடுங்குகின்ற அல்லது அழிக்கின்ற அல்லது ஏதேனும் தாவரத்துக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஏதேனும் இழப்பை அல்லது சேதத்தை விளைவிக்கின்ற ;

(எ) ஏதேனும் தாவரத்தை விற்பனை செய்கின்ற, விற்பனைக்காக வெளிக் காட்டி வைக்கின்ற, காட்சிக்கு வைக்கின்ற அல்லது விற்பனைக்கு முன்வைக்கின்ற ;

(ஏ) ஏதேனும் பறவையை, விலங்கை, ஊர்வதனை அல்லது நீர்வாழ், நிலம்வாழ் பிராணியைக் கொல்லுகின்ற அல்லது கொல்வதற்கு முயல்கின்ற அல்லது பொறிகளை அல்லது கண்ணிகளை அல்லது துவக்குகளை வைக்கின்ற,

பதுங்கிடங்களை அமைத்துப் பயன் படுத்துகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பறவையை, விலங்கை, ஊர்வதனை அல்லது நீர்வாழ், நிலம்வாழ் பிராணைத் தொந்தரவு படுத்துகின்ற, குழப்புகின்ற அல்லது அதற்கு வெடிவைக்கின்ற அல்லது அதனைத் தொந்தரவுபடுத்த, குழப்ப அல்லது அதற்கு வெடிவைக்க முயல் கின்ற அல்லது அதனை அகற்ற முயல் கின்ற ;

(ஐ) ஏதேனும் பறவையை, விலங்கை, ஊர்வதனை அல்லது அத்தகைய ஏதேனும் பறவையின், விலங்கின் அல்லது ஊர்வதின் ஏதேனும் பாகத்தை விற்பனை செய்கின்ற, விற்பனைக்கு முன்வைக்கின்ற அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கின்ற ;

(ஒ) ஏதேனும் பறவையின் அல்லது விலங்கின் அல்லது ஊர்வதின் ஒரு முட்டையை எடுக்கின்ற அல்லது அழிக்கின்ற அல்லது ஏதேனும் பறவையின் அல்லது விலங்கின் அல்லது ஊர்வதின் ஏதேனும் வாழிடத்தை அல்லது கூட்டை அகற்று கின்ற அல்லது அழிக்கின்ற ;

(ஓ) ஏதேனும் துவக்கைச் சுடுகின்ற அல்லது ஏதேனும் விலங்கைக் குழப்புகின்ற அல்லது குழப்பும் சாத்தியங்கொண்ட ஏதேனும் செயலைச் செய்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் விலங்கின் இனப் பெருக்கவிடத்துடன் தலையிடுகின்ற அல்லது தலையிடும் சாத்தியங்கொண்ட ஏதேனும் செயலைச் செய்கின்ற ;

(ஔ) ஏதேனும் விலங்கை அல்லது தாவரத்தை ஊறுபடுத்துவதற்கு அல்லது அழிப்பதற்குப் பயன்படுத்தப்படுவதற்கு இயன்றதாகவுள்ள ஏதேனும் பொறியை அல்லது ஆயுதத்தை அல்லது கருவியை அல்லது வெடிப்பொருட்களை அல்லது நச்சுப் பதார்த்தத்தை உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது பயன்படுத்துகின்ற ;

(க) ஏதேனும் நிரந்தமான அல்லது தற்காலிகமான கட்டிடத்தை நிறுவுகின்ற அல்லது அவ்வாறு நிறுவப்பட்ட ஏதேனும் கட்டிடத்தில் இருப்பாட்சி கொள்கின்ற ;

(ங) ஏதேனும் புதிய காடழிப்பைச் செய்கின்ற அல்லது கல் அகழ்கின்ற அல்லது முருகைக்கல்லை அல்லது நத்தைச் சிப்பிகளைத் தேடிப்பெறுகின்ற அல்லது காரீயத்தை, இரத்தினக்கற்களை அல்லது கனிப்பொருட்களைத் தோண்டுகின்ற அல்லது சுரங்கமகிழ்கின்ற, சுண்ணாம்பை அல்லது கரியை எரிக்கின்ற அல்லது பாறைக்கற்களை வெடிக்கவைக்கின்ற, மணலை அல்லது மண்ணை அல்லது கற்களைச் சேகரிக்கின்ற அல்லது அகற்றுகின்ற அல்லது இடம்பெயர்க்கின்ற ;

(ச) ஏதேனும் நெருப்பை மூட்டுகின்ற அல்லது எரியச் செய்கின்ற அல்லது கொண்டு செல்கின்ற அல்லது ஏதேனும் நெருப்பை மூட்டச் செய்விக்கின்ற அல்லது ஏதேனும் நெருப்பு எரிந்துகொண்டிருப்பதனை அல்லது பரவுவதனை அனுமதிக்கின்ற ;

(ஞ) பயிர்ச்செய்கைக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக மண்ணைத் துப்புரவாக்குகின்ற அல்லது துண்ட

மாக்குகின்ற அல்லது ஏதேனும் காணியைத் தோண்டுகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் துப்புரவாக்கப்பட்ட காணியில் பயிரிடுகின்ற அல்லது குடிசையொன்றை நிறுவுகின்ற அல்லது அதன்மீது வேறேனும் செயற்பாட்டைச் செய்கின்ற ;

(ட) ஏதேனும் வீதியை நிருமாணிக்கின்ற அல்லது அவ்வாறு நிருமாணிக்கப்பட்ட ஏதேனும் வீதியை மாற்றுகின்ற அல்லது சேதப்படுத்துகின்ற அல்லது அவ்வாறு நிர்மாணிக்கப்பட்டவொரு வீதியைப் பயன் படுத்துகின்ற ;

(ண) ஏதேனும் சுவரை, குழியை, வரம்புக் கட்டை, வேலியை, தடையை, பீலியை, புதர்வேலியை, பெயர்ப்பலகையை அல்லது சைகைப் பலகையை அல்லது வேறேதேனும் எல்லைக் குறியைச் சேதப் படுத்துகின்ற, மாற்றுகின்ற, அகற்று கின்ற அல்லது உருவழிக்கின்ற,

ஆளொருவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல் ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற் றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். மேலேயுள்ளவற்றுடன் சேர்த்து மேலதிகமாக, நீதிமன்றமானது, பேணற் காட்டுக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்துக்காக நட்டஈடு வழங்கலாம். அத்தகைய நட்டஈடு, பேணற் காட்டுக்கு விளைவிக்கப்பட்ட சேதத்தின் பெறுமதிக்குக் குறையவிருத்தலாகாது என்பதுடன், நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் குற்றப்பணமொன்றென்றாற்போன்று இறுக்கப் பட்டு அறவிடப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறைப் புரிவதற்குத் துணைபுரிகின்ற அல்லது உடந்தையாகவிருக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் தவறு புரியப்படுவதனை விளைவிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் அத்தவறைப் புரிவதற்காகக் குறித்துரைக்கப்படுகின்வாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) காடு பேணுநர்-தலைமையதிபதி-

(அ) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பமொன்றைச் செய்துள்ள ; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியுள்ள,

எவரேனுமாளுக்கு, விதித்துரைக்கப்படக்கூடியவாறான நியதி நிபந்தனைகளுக்கமைய அத்தகைய இடப்பரப்புகளினுள் அறிவியல் ஆராய்ச்சியிலும் தாவர, விலங்கின அவதானிப்பிலும் ஈடுபடுவதற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கலாம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

“ஒதுக்குக் காடொன்றில் தடை செய்யப்பட்ட செயல்கள்.

7. (1) ஒதுக்குக் காடொன்றில் -

(அ) அத்துமீறுகின்ற அல்லது அத்துமீறுகையை விளைவிக்கின்ற அல்லது அதன்கண் தங்கியிருக்கின்ற ;

(ஆ) கால்நடைகளை அத்துமீற அனுமதிக்கின்ற அல்லது புல்லை அல்லது வேறு ஏதேனும் தாவரத்தை வெட்டுகின்ற அல்லது புல்லை அல்லது தாவரங்களைக் கால்நடைகளுக்கு உணவாக ஊட்டுகின்ற ;

(இ) ஒரு மரத்தை வெட்டி வீழ்த்துகின்ற அல்லது வெட்டுமரத்தை வெட்டுகின்ற அல்லது இழுத்துச் செல்கின்ற, அசட்டையினால் சேதம் விளைவிக்கின்ற அல்லது வேண்டுமென்றே ஏதேனும் மரத்திலிருந்து பட்டையை அல்லது இலைகளை உரிக்கின்ற அல்லது ஒரு மரத்தைப் பட்டையகற்றி வளையமிடு கின்ற, மரக்கொப்புகளை வெட்டுகின்ற, சாறு வடியச் செய்கின்ற அல்லது எரிக்கின்ற அல்லது ஏதேனும் மரத்தைச் சேதப்படுத்துவதற்கு அல்லது அழிப்ப தற்கு ஏதேனும் செயலைச் செய்கின்ற ;

(ஈ) அத்தகைய காட்டினுள் உள்ள எவையே னும் நீர்வழிகளைத் தடைசெய்கின்ற அல்லது ஒரு நீர்க்குழாய் அல்லது வேறு எவையேனும் உபாயங்கள்மூலம் அத்த கைய நீர்வழியிலிருந்து நீரைப்பெறுகின்ற அல்லது நீரைத் தீழ்ப்பாக்குகின்ற அல்லது நீரை நஞ்சூட்டுகின்ற அல்லது ஏதேனும் குப்பைகூளத்தைக் காட்டில் கொட்டுவதன்மூலம் கையாண்டு தீர்ப்ப தன் மூலம் காட்டுச் சூழலைத் தீழ்ப் பாக்குகின்ற ;

(உ) ஏதேனும் தாவரத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை இடம்பெயர்க்கின்ற, அகற்றுகின்ற, வேரோடு பிடுங்குகின்ற அல்லது அழிக்கின்ற அல்லது ஏதேனும் தாவரத்தை அல்லது ஏதேனும் தாவரத் தின் ஏதேனும் பாகத்தைச் சேதப்படுத்து கின்ற அல்லது ஏதேனும் தாவரத்தை விற்பனை செய்கின்ற அல்லது விற்ப னைக்கு வெளிக்காட்டி வைக்கின்ற அல் லது காட்சிக்கு வைக்கின்ற அல்லது விற்பனைக்கு முன்வைக்கின்ற ;

(ஊ) ஏதேனும் பறவையை, விலங்கை அல்லது ஊர்வதனைக் கொல்லுகின்ற அல்லது கொல்ல முயலுகின்ற, அகற்றுகின்ற, இடம்பெயர்க்கின்ற, அதற்கு வெடிவைக்

கின்ற அல்லது வெடிவைப்பதற்கு முயலுகின்ற, அதனைப் பிடிக்கின்ற, பொறிகளை வைக்கின்ற அல்லது பிடிப்பதற்குக் கண்ணிகளை வைக்கின்ற, தொந்தரவுபடுத்துகின்ற அல்லது குழப்பு கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பறவையின், விலங்கின் அல்லது ஊர்வதின் ஏதேனும் பாகத்தை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கின்ற அல்லது விற்பனைக்கு முன்வைக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பறவையின், விலங்கின் அல்லது ஊர்வதின் முட்டைகளை எடுக்கின்ற அல்லது அழிக்கின்ற, அல்லது அத்த கைய ஏதேனும் பறவையின், விலங்கின் அல்லது ஊர்வதின் வாழிடத்தை அழிக்கின்ற அல்லது அகற்றுகின்ற ;

(எ) கற்களை அகழ்கின்ற, சுண்ணாம்பை அல்லது கரியை எரிக்கின்ற, ஏதேனும் காட்டு விளைபொருளைச் சேகரிக்கின்ற அல்லது ஏதேனும் உற்பத்திச் செய்முறைக்கு அவற்றை உட்படுத்து கின்ற, அல்லது முருகைக்கல்லை அல்லது நத்தைச் சிப்பிகளைத் தேடிப் பெறுகின்ற, காரியத்தை, இரத்தினக் கற்களை அல்லது வேறு வகையினவான கனிப்பொருட்களைத் தோண்டுகின்ற அல்லது சுரங்கமகழ்கின்ற அல்லது மணலை, மண்ணை அல்லது கற்களைச் சேகரிக்கின்ற அல்லது அகற்றுகின்ற அல்லது இடம்பெயர்கின்ற அத்துடன் அத்தகைய நோக்கத்துக்காக வெடிப் பொருட்களைப் பயன்படுத்துகின்ற அல்லது உடைமையில் வைத்திருக்கின்ற;

(ஏ) ஏதேனும் நெருப்பை மூட்டுகின்ற அல்லது நெருப்பை எரியச்செய்கின்ற அல்லது ஏதேனும் நெருப்பை எரியவிட்டுவிடு கின்ற அல்லது ஏதேனும் நெருப்பை ஏற்படுத்துகின்ற அல்லது ஏதேனும் நெருப்புப் பரவுவதனை அனுமதிக்கின்ற அல்லது ஏதேனும் நெருப்பைக் கொண்டு செல்கின்ற ;

(ஐ) ஏதேனும் மரத்தை வெட்டி வீழ்த்துகின்ற, அல்லது ஏதேனும் மரத்தை அல்லது வெட்டுமரத்தை வெட்டுகின்ற, அறுக் கின்ற, மாற்றுகின்ற, உருமாற்றுகின்ற, சேகரிக்கின்ற, அகற்றுகின்ற அல்லது இடம்பெயர்க்கின்ற அல்லது ஏதேனும் காட்டு விளைபொருளைத் தனதுடை மையில், கட்டுக்காவலில் அல்லது கட்டுப் பாட்டில் வைத்திருக்கின்ற ;

(ஒ) ஒரு அரிமேடையை நிறுவுகின்ற அல்லது ஒரு மர அறுப்புக்குழியை நிருமாணிக் கின்ற ;

(ஓ) பயிர்ச்செய்கைக்காக மண்ணைத் துப்புர வாக்குகின்ற அல்லது துண்டமாக்கு கின்ற அல்லது பயிர்ச்செய்கைக்காக ஏதேனும் காணியைத் தோண்டுகின்ற அல்லது கட்டிட நோக்கங்களுக்காக ஏதேனும் காணியை ஆயத்தஞ் செய்கின்ற அல்லது ஏற்கனவே துப்புரவாக்கப்பட்ட ஏதேனும் காணியில் பயிரிடுகின்ற அல்லது நிரந்தரமான அல்லது தற்காலிகமான ஒரு குடிசையை அல்லது ஏதேனும் கட்டிடத்தை நிறுவுகின்ற அல்லது அவ்வாறு நிறுவப்பட்ட ஏதேனும் கட்டிடத்தில் இருப்பாட்சி கொள்கின்ற ; அல்லது

(ஔ) ஏதேனும் வீதியை நிருமாணிக்கின்ற, ஏற்கனவே நிருமாணிக்கப்பட்ட ஏதேனும் வீதியை மாற்றுகின்ற அல்லது சேதப் படுத்துகின்ற, அவ்வாறு நிர்மாணிக் கப்பட்ட ஏதேனும் வீதியைப் பயன்படுத்து கின்ற, ஏதேனும் சுவரை, குழியை, வரம்புக்கட்டையை, வேலியை, தடையை, பீலியை, புதர்வேலியை, பெயர்ப் பலகையை, சைகைப் பலகையை அல்லது வேறேதேனும் எல்லைக் குழியைச் சேதப்படுத்துகின்ற, மாற்றுகின்ற, உருவழிக்கின்ற அல்லது அகற்றுகின்ற,

எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியா தல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல் ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். மேலேயுள்ளவற்றுடன் சேர்த்து மேலதிகமாக நீதிமன்றமானது, ஒதுக்குக் காட்டுக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத் துக்காக நட்டஈட்டை வழங்கலாம். அத்தகைய நட்டஈடு, ஒதுக்குக் காட்டுக்கு விளைவிக்கப்பட்ட சேதத்தின் உண்மையான பெறுமதிக்குச் சமமாக விருத்தல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றத் தினால் விதிக்கப்படும் குற்றப்பணமொன்றென் றாற் போன்று இறுக்கப்பட்டு அறவிடப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறைப் புரிவதற்குத் துணைபுரிகின்ற அல்லது உடந்தையாகவிருக்கின்ற, அல்லது அத்தகைய ஏதேனும் தவறு புரியப்படுவதனை விளைவிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், அத்தவறைப் புரிவ தற்காகப் குறித்துரைக்கப்படுகின்றவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ மற்றும் 9 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 7அ மற்றும் 9 ஆம் பிரிவுகளை நீக்குதல்.

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீளஇலக்கமிடுவதன்மூலமும் ;

(2) மீளஇலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(2) காடு பேணுநர்-தலைமையதிபதி, முகாமைத் திட்டத்திலிருந்து அல்லது அது சம்பந்தமாக எழுகின்ற ஏதேனும் அலுவலகமுறையான கடமையை ஆற்றுகின்ற நோக்கத்துக்காக ஒரு பேணற் காட்டினுள், ஒதுக்குக் காட்டினுள், கிராமியக் காட்டினுள் அல்லது வேறேதேனும் காட்டினுள் பிரவேசிப்பதற்கு அல்லது தங்கியிருப்பதற்கு எவரேனுமாளுக்கு உரியமுறையில் அதிகாரமளிக்கலாம்.".

**13**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"ஒரு பேணற் காடு, ஒதுக்குக் காடு அல்லது கிராமியக் காடு தவிர்ந்த வேறு ஏதேனும் காட்டில் தடை செய்யப்பட்ட செயல்கள்.

20. (1) ஒரு பேணற் காடு, ஒதுக்குக் காடு அல்லது கிராமியக் காடு தவிர்ந்த காடொன்றில் -

(அ) ஏதேனும் மரத்தை வெட்டி வீழ்த்துகின்றபோது அல்லது ஏதேனும் வெட்டுமரத்தை வெட்டுகின்றபோது அல்லது இழுத்துச்செல்கின்றபோது அசட்டையால் சேதம் விளைவிக்கின்ற;

(ஆ) ஏதேனும் மரத்திலிருந்து பட்டையை அல்லது இலைகளை உரிக்கின்ற அல்லது ஏதேனும் மரத்தை பட்டையை கற்றி வளையமிடுகின்ற, சாறு வடியச் செய்கின்ற அல்லது எரிக்கின்ற அல்லது ஏதேனும் மரத்தை வேறுவகையில் சேதப்படுத்துகின்ற ;

(இ) அத்தகைய காட்டினுள் உள்ள எவையேனும் நீர்வழிகளைத் தடைசெய்கின்ற அல்லது ஒரு நீர்க்குழாய் அல்லது வேறு எவையேனும் உபாயங்கள் மூலம் அத்தகைய நீர்வழியலிருந்து நீரைப் பெறுகின்ற அல்லது நீரைத் தீழ்ப்பாக்குகின்ற அல்லது நீரை நஞ்சூட்டுகின்ற அல்லது ஏதேனும் குப்பைகூளத்தைக் காட்டினுள் கொட்டுவதன்மூலமும் கையாண்டு தீர்ப்பதன்மூலமும் காட்டுச்சூழலைத் தீழ்ப்பாக்குகின்ற ;

(ஈ) கற்களை அகழ்கின்ற, சுண்ணாம்பை அல்லது கரியை எரிக்கின்ற அல்லது ஏதேனும் காட்டு விளைபொருளைச் சேகரிக்கின்ற அல்லது அவற்றை ஏதேனும் உற்பத்திச் செய்முறைக்கு உட்படுத்துகின்ற, அல்லது முருகைக் கல்லை அல்லது நத்தைச் சிப்பிகளைத் தேடிப்பெறுகின்ற, அல்லது காரியத்தை, இரத்தினக்கற்களை அல்லது வேறேதேனும் கனிப்பொருளைத் தோண்டுகின்ற அல்லது அகழ்கின்ற அல்ல அத்தகைய நோக்கங்களுக்காக வெடிபொருட்களைப் பயன்படுத்துகின்ற அல்லது உடைமையில் வைத்திருக்கின்ற ;

(உ) புல்லைக் கால்நடைகளுக்கு ஊட்டுகின்ற, வேட்டையாடுகின்ற, வெடிவைக்கின்ற, மீன்களைப் பிடிக்கின்ற அல்லது பொறிகளை, கண்ணிகளை அல்லது துவக்குகளை வைக்கின்ற ;

(ஊ) எவையேனும் துப்புரவாக்குதல்களைச் செய்கின்ற ;

(எ) ஏதேனும் காட்டுக்கு அல்லது அத்தகைய காட்டின் ஏதேனும் பாகத்துக்கு ஆபத்து உண்டாக்குகின்றவாறான அத்தகையவொரு முறையில் நெருப்பு வைக்கின்ற அல்லது நெருப்பை மூட்டுகின்ற ;

(ஏ) காலத்துக்குக்காலம் அதற்கென அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பருவகாலங்களின்போதும் அத்தகைய முறையிலும் தவிர, ஏதேனும் நெருப்பை மூட்டுகின்ற, எரியவிடுகின்ற அல்லது நெருப்பைக் கொண்டுசெல்கின்ற ;

(ஐ) ஏதேனும் மரத்தை வெட்டி வீழ்த்துகின்ற அல்லது ஏதேனும் மரத்தை அல்லது வெட்டுமரத்தை வெட்டுகின்ற, உருமாற்றுகின்ற, சேகரிக்கின்ற, அகற்றுகின்ற அல்லது இடம்பெயர்க்கின்ற அல்லது ஏதேனும் காட்டு விளைபொருளைத் தனதுடைமையில், கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற ;

(ஒ) ஒரு அரிமேடையை நிறுவுகின்ற அல்லது மர அறுப்புக்குழியை நிருமாணிக்கின்ற ;

(ஓ) பயிர்ச்செய்கைக்காக அல்லது வேறே தேனும் நோக்கத்துக்காக மண்ணைத் துப்புரவாக்குகின்ற அல்லது துண்ட மாக்குகின்ற அல்லது ஏதேனும் காணியைத் தோண்டுகின்ற அல்லது ஏற்கனவே துப்புரவாக்கப்பட்ட ஏதேனும் காணியைப் பயிரிடுகின்ற ;

(ஔ) நிரந்தரமான அல்லது தற்காலிகமான குடிசையொன்றை அல்லது எதேனும் கட்டிடத்தை நிறுவுகின்ற அல்லது அவ்வாறு நிறுவப்பட்ட ஏதேனும் கட்டிடத்தில் இருப்பாட்சிகொள்கின்ற ;

(க) ஏதேனும் வீதியை நிருமாணிக்கின்ற அல்லது அவ்வாறு நிருமாணிக்கப் பட்ட ஏதேனும் வீதியைப் பயன்படுத்து கின்ற ;

(ங) ஏதேனும் பெயர்ப்பலகையை அல்லது சைகைப் பலகையை அல்லது ஏதேனும் சுவரை, குழியை, வரம்புக்கட்டை, வேலியை, தடையை, பீலியை அல்லது வேறேதேனும் எல்லைக்குறியை சேதப் படுத்துகின்ற, மாற்றுகின்ற அல்லது அகற்றுகின்ற அல்லது பொய்யான எல்லைகளைக் குறியிடுகின்ற,

ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மேல் இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு, அல்லது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்துக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். நீதிமன்றம், மேற்கூறப்பட்டவற்றுக்கு மேலதிகமாக, அத்தகைய காட்டுக்கு விளைவிக்கப் பட்ட ஏதேனும் சேதத்துக்காக நட்டஈடு வழங்கலாம்.

அத்தகைய நட்டஈடு, விளைவிக்கப்பட்ட சேதத்தின் பெறுமதிக்குக் குறையவிருத்தலாகாதென்பதுடன், அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமென்றாற்போன்று இறுக்கப்பட்டு அறவிடப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உப்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறு புரியப்படுவதற்குத் துணைபுரிகின்ற அல்லது உடந்தையாகவிருக்கின்ற, அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனை விளைவிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் அத்தவறைப் புரிவதற்காகக் குறித்துரைக்கப்படுகின்றவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

**14**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை நீக்குதல்.

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, "அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட காட்டு அலுவலரின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "காட்டு அலுவலரின் அல்லது அதற்கென உரிய முறையில் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலரின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் அத்தியாயத்தை உடனடுத்து IVஅ என்னும் புதிய அத்தியாயம் 23அ, 23ஆ, 23இ மற்றும் 23ஈ என்னும் பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் அத்தியாயம் IVஅ எனப் பயனுறுதலும் வேண்டும் :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் IVஅ என்னும் புதிய அத்தியாயத்தையும் 23அ, 23ஆ, 23இ மற்றும் 23ஈ என்னும் பிரிவுகளையும் உட்புகுத்துதல்.

## "அத்தியாயம் IVஅ

### ஒரு பதிவுச் சான்றிதழையும் ஓர் அனுமதிப் பத்திரத்தையும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைமுறை

*ஒரு பதிவுச் சான்றிதழும் ஓர் அனுமதிப் பத்திரமும் இன்றி, வெட்டு மரச்சாலை முதலிய வற்றின் தொழிலைக் கொண்டு நடாத்து வதற்கான தடை.*

23அ. காடு பேணுநர்-தலைமையதிபதியினால் அல்லது அதற்கெனக் காடு பேணுநர் தலைமை யதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் வழங்கப்பட்டதும், அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்காக அதன்கண் கூறப்பட்ட வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அதிகாரமளிக்கின்றதுமான ஒரு பதிவுச் சான்றிதழினதும் ஓர் அனுமதிப்பத்திரத்தினதும் அதிகாரத்தின் கீழன்றி வேறுவகையாக ஆளெவரும், வெட்டுமரச்சாலை நடாத்துதல் என்ற வியாபாரத்தைக் கொண்டுநடாத்துதலாகாது.

*அனுமதிப் பத்திரத்தை வழங்குதல்.*

23ஆ. (1) காடு பேணுநர்-தலைமையதிபதி அல்லது அதற்கெனக் காடு பேணுநர்-தலைமை யதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அவருக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீதும், விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீதும், குறித்துரைக் கப்பட்ட நியதிநிபந்தனைகளுக்கு அமையவும், வெட்டுமரச்சாலை நடாத்துதல் என்ற வியாபாரத் தில் ஈடுபடுவதற்கு எவரேனுமாளுக்கு அதிகார மளித்து, அத்தகைய ஆளுக்கு ஒரு பதிவுச்சான்றி தழையும் ஓர் அனுமதிப்பத்திரத்தையும் வழங் கலாம்.

(2) சொல்லப்பட்ட அனுமதிப்பத்திரம் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குச் செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன், விதித்து ரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது புதுப்பிக்கவும்படலாம்.

பதிவுச் சான்றிதழையும் அனுமதிப் பத்திரத்தையும் இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதல்.

23இ. பிரிவு 23ஆ வின்கீழ் ஒரு பதிவுச் சான்றிதமும் ஓர் அனுமதிப்பத்திரமும் எவரேனுமாளுக்கு வழங்கப்படுமிடத்தும், அத்தகைய ஆள், அனுமதிப் பத்திரத்தின் நியதிகளுள் அல்லது நிபந்தனைகளுள் எவறையும் மீறிச் செயலாற்றுமிடத்தும், காடு பேணுநர்-தலைமையதிபதி அல்லது காடு பேணுநர்-தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர், கட்டளைமூலம், அத்தகைய பதிவை அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காலப்பகுதிக்கு இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

தண்டம்.

23ஈ. (1) பிரிவு 23அ வின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் -

(அ) தவறானது, நிலத்துடன் பொருத்தப்பட்டுள்ள அல்லது வேறுவகையான வெட்டுமர அரியாலை, வெட்டுமர விற்பனை நிலையம் அல்லது வெட்டுமரம் பதனிடுதல் மற்றும் செய்முறைப்படுத்துதல் தொழிற்சாலையை நடாத்துதல் என்ற வியாபாரத்தில் ஈடுபடுவதற்காகவிருக்குமிடத்து, ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) தவறானது, தச்சுவேலைக்கடை (பொறிமுறையான அல்லது வேறுவகையான) நடைபாதைக்கடை அல்லது மரத்தினாலான கருவிகளை அல்லது அவற்றின் பாகங்களை அல்லது மரத்தினாலான எவையேனும் பொருட்களை விற்பனை

செய்யும் கடை அல்லது விறகுச்சாலை நடாத்துதல் என்ற வியாபாரத்தில் ஈடுபடுவதற்காகவிருக்குமிடத்து, ஆயிரம் ரூபாவுக்கு குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாள், அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுவாரக் காலப்பகுதிக்குப் பின்னர் அத்தகைய தவறைத் தொடர்ந்து புரியுமிடத்து, நீதிமன்றம், அத்தகைய தொழிலை அல்லது வியாபாரத்தை மூடிவிடுவதற்காக காடு பேணுநர்-தலைமையதிபதியினால் அல்லது அதன் சார்பில் காடு பேணுதநர்-தலைமையதிபதியினால் நியமிக்கப்படும் எவரேனும் ஆளினால் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மேல், அத்தகைய ஆள் ஒரு பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுக் கொள்ளுகின்ற மற்றும் அனுமதிப்பத்திரத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகும் அத்தகைய காலம்வரை, வியாபாரத்தை மூடிவிடும்படி கட்டளையிடலாம்.

(3) அத்தகைய ஆள் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறுவதுடன் ஒரு வெட்டு மரச்சாலை நடாத்துதல் என்ற வியாபாரத்தில் தொடர்ந்தும் ஈடுபடுகின்ற ஏதேனும் விடயத்தில், நீதிவான், கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் அவர் தமது வியாபாரத்தை அவ்வாறு தொடர்ந்து கொண்டுநடாத்துகின்ற ஒவ்வொரு நாளுக்கும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு பணத் தொகையைச் செலுத்தும்படி அத்தகைய ஆளுக்குக் கட்டளையிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கட்டளை வழங்கப்பட்ட தேதிக்கு மூன்று நாட்களுக்கு முந்தாமலும் ஏழு நாட்களுக்குப்

பிந்தாமலும் உள்ள ஒரு தேதியாகவிருக்கும் அத்தகைய தேதிக்கு முன்னர், அத்தகைய வளவுகளில் கொண்டுநடாத்தப்படுகின்ற அத்த கைய வெட்டுமரச்சாலை நடாத்துதல் என்ற வியாபாரத்தை மூடிவிடுவதற்கு நீதிமன்றப் பிசுக்காலைத் தேவைப்படுத்தி அவருக்கு அதிகார மளித்தலும் வேண்டும். அத்தகைய வளவுகளில் கொண்டுநடாத்தப்பட்டுக்கொண்டிருந்த வெட்டுமரச்சாலை நடாத்துதல் என்ற வியாபா ரத்தை மூடிவிடுவதற்கு அவசியமெனப் பிசுக்கால் கருதுகின்றவாறான அத்தகைய உதவியாளர்க ளுடன் அவ்வளவுகளினுட் பிரவேசிப்பதற்குச் சொல்லப்பட்ட பிசுக்காலுக்கு அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் பொலிசு அலுவலருக்கு அத்தகைய கட்டளை போதிய அதிகாரமாக இருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படு கின்றது :-

(1) "தரைமூலமாக அல்லது நீர்மூலமாகப்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தரைமூலமாக, வான்மூலமாக அல்லது நீர்மூலமாகப்" என்னும் சொற்களை இடுவ தன்மூலமும் ;

(2) பந்தி (ஐ) இல் "இடம்பெயர்த்தற்கு" என்னும் சொல் தோன்றுமிடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக "இடம் பெயர்த்தற்கு அல்லது அகற்றுவதற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அதன் (ஞ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலமும் :-

"(ஞ) வெட்டுமரத்தையும் காட்டு விளைபொருளையும் இறக்குமதி செய்வதையும் ஏற்றுமதி செய்வதை யும் அத்துடன் கட்டணங்களை விதிப்பதையும் ஒழுங்குபடுத்தலும் ;

(ட) காடுபேணுநர் தலைமையதிபதியினால் அத்தகைய நோக்கத்துக்காக வழங்கப்படும் உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி, ஏதேனும் வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருளை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்தலும் ; அத்துடன்

(ண) குறித்துரைக்கப்படும் ஏதேனும் வெட்டுமரம் ஏற்றுமதி செய்யப்படுவதனைத் தடைசெய்தலும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24அ என்னும் புதிய பிரிவைத் உட்புகுத்துதல்.

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்புடைமை.

24அ. (1) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் எல்லா வெட்டுமரமும் அல்லது காட்டுவிளைபொருளும் தொடர்பில் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வீதங்களிலான கட்டணமொன்றைக் கப்பலிலேற்றும் கப்பற்றுறையில் அறவிடுவது சுங்கத் திணைக்களத்தின் அலுவலரொருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவானது, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பாகமாக அது அமைகின்றது என்றாற்போன்று வலுவுறுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) “ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஐம்பதாயிரம் ரூபாவுக்குகு மேற்படாத குற்றப் பணத்தினால் அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஆறு மாதங்களுக்கு அதிகமா காததுமான ஒரு காலத்திற்கான” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது நான்காண்டுகளை விஞ்சாத ஒரு காலத்துக்கு” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அப்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகத் தில் “பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்து டன் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்தினால் அல்லது ஆறு மாதங்களுக்குக் குறையாத அத்துடன் இரண்டு வருடங்களுக்கு மேற்படாத” என்னும் சொற்க ளுக்குப் பதிலாக “ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது நான்காண்டுகளை விஞ்சாத ஒரு காலத்துக்கு” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) “ஆறு மாதங்களுக்குக் குறையாத அத்துடன் ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத காலத்துக்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஐந்தாண்டு களை விஞ்சாத ஒரு காலத்துக்கு அல்லது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாததான வொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவுக்கான காப்புவாசகத்தில் “இரண்டா யிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத அத்து டன் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத அத்துடன் ஒரு வருடத்திற்கு மேற்

படாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவு இடப்படுகின்றது :-

"(2அ) ஏதேனும் கருவியின், வாகனத்தின் அல்லது பொறியின் சொந்தக்காரராக உள்ளவரும் அல்லது அவற்றை உடைமை கொண்டுள்ளவரும், அவற்றை இவ்வத்தியாயத்தின்கீழான தவறொன்றைப் புரிவதில் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கின்றவருமான எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பண மொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத தானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாத லும் வேண்டும்."; அத்துடன்

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "இவ்வத்தியாயத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "இவ்வத்தியாயத்தில் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில் "அரசாங்க அதிபர்" என்னும் சொற்கள் தோன்றும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "மாவட்டச் செயலா

ளர், பிரதேச செயலாளர் அல்லது வலயக்காட்டு அலுவலர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவியிலுள்ள காட்டு அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(2) ஏதேனும் வெட்டுமரம் அல்லது காட்டு விளைபொருள் தனியார் ஆதனத்திலிருந்து பெறப்பட்டதெனக்கூறி அத்தகைய வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருளை இடம்பெயர்ப்பதற்காக அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பமொன்றைச் செய்கின்றவரான எவரேனுமாள், அத்தகைய வெட்டுமரம் அல்லது காட்டு விளைபொருள் ஏதேனும் வெளிப்படுத்தப்பட்ட காட்டிலிருந்து அல்லது அரச காணியிலிருந்து பெறப்பட்டதென எண்பிப்பதற்கான சான்று இருப்பின், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் 25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும். அவ்விண்ணப்பமானது ஒரு சட்ட நீதிமன்றத்தில் அத்தகைய ஆளுக்கெதிரான சான்றாக ஏல்தகவுடையதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "செல்கையின்போது ஏதாவது வெட்டுமரத்தைத் தடுத்து நிறுத்திச் சோதனை செய்யவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருளை இடம்பெயர்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு ஏதேனும் வாகனம் பயன்படுத்தப்படுகின்றதாவென்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய வாகனத்தை, செல்கையின்போது தடுத்து நிறுத்துவதற்கும் சோதனை செய்வதற்கும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அதன் (அ), (ஆ), (இ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(அ) ஏதேனும் வாகனத்தை நிறுத்துவதற்கு, அல்லது அத்தகைய வாகனத்தை நிற்பாட்டும்படி செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய கட்டளையை அல்லது பணிப்பை விடுக்கலாம், அல்லது சைகையைக் காட்டலாம் அல்லது அத்தகைய உபாயங்களைப் பயன்படுத்தலாம் அல்லது அத்தகைய வழிமுறைகளை எடுக்கலாம் ;

(ஆ) ஏதேனும் வாகனத்தைச் சோதனைக்காகத் தடுத்துவைத்துத் தேடுகையிடலாம் ;

(இ) ஒரு வாகனத்தில் கண்டெடுக்கப்படும் ஏதேனும் வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருளைக் கைப்பற்றி VII ஆம் அத்தியாயத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அவ்வெட்டுமரம் மற்றும் காட்டு விளைபொருள் தொடர்பில் நடவடிக்கையெடுக்கலாம்.".

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் மேற்படாததுமான குற்றப்பணத்துக்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஆறு மாதங்களை விஞ்சாததுமான ஒரு காலத்துக்கு" என்னும் சொற்களுக்குப்பதிலாக "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாததானவொரு காலத்துக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) "வெட்டுமரம்" என்னும் சொல் அப்பிரிவில் தோன்றும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக "வெட்டுமரமும் காட்டு விளைபொருளும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(2) எவரேனும் காட்டு அலுவலர் அல்லது பொலிசு அலுவலர் இப்பிரிவின்கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது அவருடன் எவ்வகையிலும் தலையிடுகின்ற, அல்லது இப்பிரிவின்கீழான தத்துவங்களைப் பிரயோகிக்கையில் முட்டுக்கட்டையிடச் செய்விக்கின்ற அல்லது தலையிடச் செய்விக்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்தாண்டுகளை விஞ்சாததானவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாததானவொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற் றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தினால் அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத இரண்டு வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றினால் அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"வெட்டு மரத்தை அல்லது காட்டு விளை பொருளை அல்லது வாகனங்களைக் கைப்பற்றுவதற்கான தத்துவம்.

37. (1) எவரேனும் காட்டு அலுவலர் அல்லது பொலிசு அலுவலர், உரிய விசாரணையின் பின்னர், ஏதேனும் வெட்டுமரம் அல்லது காட்டு விளைபொருள் தொடர்பிலான தவறொன்று புரியப்பட்டுள்ளது அல்லது புரியப்பட்டுக்கொண்டிருக்கின்றது என நம்புவதற்கு அவருக்குக் காரணமிருப்பின், அத்தகைய ஏதேனும் தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்ட எல்லாக் கருவிகள், வாகனங்கள், உபகரணங்கள், கால்நடைகள்

அத்துடன் இயந்திரங்கள் என்பனவற்றுடன் சேர்த்து அத்தகைய வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருளைக் கைப்பற்றித் தடுத்து வைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட காட்டு அலுவலர் அல்லது பொலிசு அலுவலர் தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்ட எல்லா கருவிகள், வாகனங்கள், உபகரணங்கள், கால்நடைகள் மற்றும் இயந்திரங்கள் என்பவற்றுடனும் இயைபான ஆவணங்களுடனும் சேர்த்து அத்தகைய கைப்பற்றுகை மற்றும் தடுத்து வைத்தலிலிருந்து ஏழு வேலைநாட்களினுள் அத்தகைய வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருளை நியாயாதிக்கங் கொண்ட நீதிவான் முன்னர் காண்பித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருளை, அவ்வாறு கைப்பற்றப்பட்ட வெட்டுமரத்தின் அல்லது காட்டு விளைபொருளின் பெறுமதியை விஞ்சுகின்றதாய் அதனை ஏற்றுவதிலும் இடம்பெயர்ப்பதிலும் பெருந்தொகையினவான செலவினத்தை உறாமல் காண்பிக்க முடியாதென்ற காரணத்துக்காக அத்தகைய வெட்டுமரம் அல்லது காட்டு விளைபொருள் கைப்பற்றப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட இடத்திலிருந்து அத்தகைய வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருளை அகற்றி நீதிமன்றத்தில் காண்பிப்பது செயல்முறைக்குகந்ததல்லவென நேரடியாக அறிந்துள்ள வரும் திருப்திப்படுகின்றவருமான காடு பேணுநர்-தலைமையதிபதியின் அல்லது வலயக் காட்டு அலுவலர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவியிலுள்ள எவரேனும் அலுவலரின் அல்லது உப பொலிசுப் பரிசோதகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவியிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலரின் கைப்பட்ட சான்றிதழொன்று,

சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டு மென்பதுடன், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்ற எண்பிப்பாதலும் வேண்டும்.".

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38அ என்னும் பிரிவு, "மோட்டார் வாகனம், இயந்திரம், கருவி, இழுவை, படகு, இழுவை வண்டி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வாகனம், உபகரணம், கால்நடை, இயந்திரம்" என்னும் சொற்களையும், "37 ஆம் பிரிவின்கீழ் பறிமுதல் செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "37 ஆம் பிரிவின்கீழ் கைப்பற்றப்பட்ட அல்லது சான்றிதழ் கொடுக்கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 38அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(1) எவரேனுமாள் ஏதேனும் காடு சம்பந்தமான தவறுக் குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து -

(அ) அரசின் ஆதனமாக இராததான எந்த வெட்டுமரம் அல்லது காட்டு விளைபொருள் தொடர்பில் அத்தகைய தவறுபுரியப்பட்டுள்ளதோ அந்த எல்லா வெட்ட மரமும் அல்லது காட்டு விளைபொருளும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்ட எல்லா கருவிகளும், வாகனங்களும், உபகரணங்களும், கால்நடைகளும் மற்றும் இயந்திரங்களும்,

அத்தகைய தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் வேறேதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, குற்றத்தீர்ப்பளிக்கின்ற நீதிவானின் கட்டளைமூலம் பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய தவறைப் புரிவதில் பயன்படுத்தப் பட்ட அத்தகைய கருவிகளின், வாகனங்களின், உபகரணங்களின், கால்நடைகளின் மற்றும் இயந்திரங் களின் சொந்தக்காரர் மூன்றாம் திறத்தவரொருவராக உள்ள ஏதேனும் விடயத்தில், விடயத்துக்கேற்ப, அத்தவறைப் புரிவதில் அத்தகைய கருவிகளும், வாகனங்களும், உபகரணங்களும், கால்நடைகளும் மற்றும் இயந்திரங்களும் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்குத் தாம் எல்லா முற்காப்புகளையும் எடுத்திருந்தாரென நீதிமன்றத்தின் திருப்திக்கு அத்தகைய சொந்தக்காரர் எண்பித்தால், பறிமுதல் கட்டளையெதுவும் ஆக்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :-

"1979 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 433அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள், காடுசம்பந்தமான தவறொன்றுக் குக் குற்றவாளி களென வழக் குரைக்கின்ற, அல்லது காடு சம்பந்தமான தவறொன் றுக்குக் குற்ற வாளிகளாகக் காணப்படுகின்ற ஆட்களுக்கு ஏற்புடையன வாதலாகாது.

40ஆ. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 433அ என்னும் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், காடு சம்பந்தமான தவறொன்றுக்குக் குற்றவாளியென வழக்குரைக்கின்ற அல்லது குற்றவாளியாகக் காணப்படுகின்ற எவரேனுமாளுக்கு அல்லது அவர் தொடர்பாக ஏற்புடையன வாதலாகாது.".

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(இ) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எந்தக் காட்டுக்கு ஏற்புடையனவாகவுள்ளனவோ அந்த ஏதேனும் காட்டின் ஏதேனும் எல்லைக்குறியை அல்லது எல்லைக் கம்பத்தை மாற்றுகின்ற, நகர்த்துகின்ற, அழிக்கின்ற, உருவழிக்கின்ற அல்லது போலியாகப் புனைகின்ற அல்லது பொய்யான நில அளவை வரைபடங்களைத் தயாரிக்கின்ற, அல்லது அத்தகைய ஏதேனும் பொய்யான நில அளவை வரைபடத்தை அளிக்கின்ற ; அல்லது

(ஈ) சட்டவிரோதமாக முத்திரையிடப்பட்ட வெட்டு மரத்தை அல்லது போலியான முத்திரையிடு தலைக் கொண்டுள்ள வெட்டுமரத்தைத் தனதுடைமையில் அல்லது கட்டுக்காவலில் வைத்திருக்கின்ற.".

(2) அப்பிரிவில் "ஆறு மாதங்களுக்குக் குறையாததும் இரண்டாண்டுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) இப்பிரிவின்கீழ் கைது ஒன்றைச் செய்கின்ற ஒவ்வோர் அலுவலரும், அவசியமற்ற தாமதமின்றி, குற்றஞ் சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படுகின்றாரோ அந்தத் தவறு புரியப்பட்டமையைக் கூறுகின்ற ஒரு கூற்றுடன் சேர்த்து, கைது செய்யப்பட்ட ஆளை மிக்க அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும். பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், கைது செய்யப்பட்ட ஆளை உடனடியாக மிக்க அண்மையிலுள்ள நீதிவானிடம் கொண்டு செல்லுதல் அல்லது அனுப்பிவைத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின்கீழ் எவரேனுமாளின் கைது, ஒரு காட்டு அலுவலரினால் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலரினால் செய்யப்படுமிடத்து, அத்தகைய ஆள், விடயத்துக்கேற்ப, ஒரு வலயக் காட்டு அலுவலரிடம் அல்லது வலய வனசீவராசிகள் பாதுகாப்பாளரிடம் கொண்டுசெல்லப்படுதல் வேண்டுமென்பதுடன் அவரினால், மிக்க அண்மையிலுள்ள நீதிவான் முன்னர் அவர் கொணரப்படுதல் வேண்டும்.".

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஒரு வருடத்திற்குக் குறையாததும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான மறியற்றடண்னைக்கு அல்லது இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கு அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றடண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49அ என்னும் பிரிவு, "ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 49அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

***32***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

“வெட்டுமரம் முதலியன அரசுக்குச் சொந்தமானவை என்னும் ஊகம்.

52. இக்கட்டளைச் சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் அல்லது இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட எதனதும் விளைவாக, ஏதேனும் வெட்டுமரம் அல்லது காட்டு விளைபொருள் அரசின் ஆதனமாகவுள்ளதாவென்பது பற்றிய கேள்வியொன்று எழுமிடத்து, அத்தகைய வெட்டுமரம் அல்லது காட்டு விளைபொருள், முரணானது எண்பிக்கப்படும் வரை, அரசின் ஆதனமாகவுள்ளதென ஊகிக்கப்படுதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்.

***33***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு, “குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில்” என்னும் சொற்கள் அப்பிரிவில் தோன்றுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, “1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில்” என்னும் சொற்களையும் எண்களையும், அத்துடன் “XVI ஆம் அத்தியாயத்தின்கீழ்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “XV ஆம் அத்தியாயத்தின்கீழ்” என்னும் சொற்களையும் எண்களையும் முறையே இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

***34***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

“அரச காணியிலிருந்து வெளியேற்றப்படுதல்.

53அ. விடயத்திற்கேற்ப, ஏதேனும் பேணற் காட்டின், ஒதுக்குக் காட்டின், கிராமியக் காட்டின் ஒரு பாகத்தை அல்லது அவ்வகுதிகளில் உள்ளடக்கப்படாத ஏதேனும் காட்டை எவரேனுமாள் சட்டவிரோதமாகத் துப்புரவாக்குமிடத்து அல்லது அத்துமீறி குடியேறியிருக்குமிடத்து அல்லது சட்டவிரோதமாக அல்லது அதிகாரமளிக்கப்படாமல்

உடைமை கொள்ளுமிடத்து, அத்தகைய ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தவறுக்கான தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக அவர் அத்தகைய காணியிலிருந்து வெளியேற்றப்படுதலும் வேண்டும் ; அத்துடன் 1979 ஆம் ஆண்டன் 7 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய ஏதேனும் வெளியேற்றுகைக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். அச்சட்டத்தில் பிரதேச செயலாளருக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், அத்தகைய காணி எந்த இடப்பரப்பில் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பின் பிரதேசக் காட்டு அலுவலருக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.”.

**35**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ), (ஆ), (இ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

| | | |
|---|---|---|
| “(அ) | ஒவ்வொரு யானைக்கும் அல்லது எருமைக்கும் | - ரூபா 15,000.00 |
| (ஆ) | ஒவ்வொரு கன்றுக்கும், கழுதைக்கும், பன்றிக்கும், செம்மறியாட்டுக்கும், செம்மறியாட்டுக் குட்டிக்கும், வெள்ளாட்டுக்கும் அல்லது வெள்ளாட்டுக் குட்டிக்கும் | - ரூபா 3,000.00 |
| (இ) | மேலேயுள்ளது தவிர்ந்து கால்நடை ஒவ்வொன்றிற்கும் | - ரூபா 7,500.00.”. |

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(இ) இக்கட்டளைச் சட்டத்தின் 24, 27, 37 மற்றும் 48 ஆகிய பிரிவுகளின் நோக்கங்களுக்காகக் காட்டு அலுவலரொருவரின் பணிகளைப் புரிவதற்கு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் எவரேனும் ஊழியருக்கு அல்லது அலுவலருக்கு ;

(ஈ) இக்கட்டளைச் சட்டத்தின் 27, 37 மற்றும் 48 ஆகிய பிரிவுகளின் நோக்கங்களுக்காகக் காட்டு அலுவலரொருவரின் பணிகளைப் புரிவதற்கு காணி ஆணையாளர் திணைக்களத்தின் மாவட்டக் காணி அலுவலரொருவருக்கு, காணி அலுவலரொருவருக்கு, கச்சேரி நில அளவையாளரொருவருக்கு, கிராம அலுவலரொருவருக்கு அல்லது குடியேற்ற அலுவலரொருவருக்கு ; அல்லது

(உ) இக்கட்டளைச் சட்டத்தின் 24, 27, 28, 30, 31, 32, 37 மற்றும் 48 ஆகிய பிரிவுகளின் நோக்கங்களுக்காகக் காட்டு அலுவலரொருவரின் பணிகளைப் புரிவதற்கு மாவட்டச் செயலாளரொருவருக்கு, பிரதேச செயலாளரொருவருக்கு அல்லது உதவிப் பிரதேச செயலாளரொருவருக்கு,".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அதன் (ஜ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ஒ) இக்கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி தொடர்பாகக் குறித்துரைக்கப்பட்ட வெட்டுமரம், காட்டு விளைபொருள் என்பனவற்றுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள வகுதியினரான அலுவலர்களைப் பெயர்குறிப்பதற்கும் நியமிப்பதற்கும் மற்றும் நோரொத்த குறித்த இடப்பரப்புகளைக் குறித்துரைக்கப்பதற்குமான தத்துவம் ;

(ஓ) *24* ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஞ) மற்றும் (ண) என்னும் பந்திகள் தொடர்பாக வெட்டுமர வகுதியையும் காட்டு விளைபொருளையும் வகுப்பாக்கஞ்செய்வதற்கான தத்துவம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

***38.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் *64* ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"ஒழுங்கு விதிகள்.

***64.*** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இக்கட்டளைச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி அமைச்சர் பின்வருவனவற்றுக்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) இக்கட்டளைச் சட்டத்தினால் அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட தத்துவங்களை அல்லது கடமைகளைப் பிரயோகிக்கவேண்டிய அல்லது புரியவேண்டிய காட்டு அலுவலரை அல்லது காட்டு அலுவலர்களின் வகுப்பை வெளிப்படுத்துவதற்கும் ;

(ஆ) "காட்டுத் திணைக்கள நிதியம்" எந்நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்டதோ அந்நோக்கத்துக்காக அத்தகைய நிதியத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், நிருவகிப்பதற்கும் ;

(இ) பின்வருவனவற்றின் முழுமையையும் அல்லது அதன் பாகத்தை அத்தகைய நிதியத்தினுட் செலுத்துவதற்காக ஏற்பாடு செய்வதற்கும் :-

(i) *இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறுகளுக்கான நட்ட ஈடாகப் பெறப்பட்ட பணத் தொகைகளும், நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணங்களின் வரும்படிகளும், பறிமுதல் செய்யப் பட்ட வாகனங்களின் விற்பனையி லிருந்தான வரும்படிகளும் ;*

(ii) *காட்டுத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடு களினூடாகப் பெறப்பட்ட பணத் தொகைகளும் ; அத்துடன்*

(iii) *அரசாங்கத்தினால், ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் கூட்டுத்தாபனத்தினால் அல்லது எவரேனும் தனியாளினால் நிதி யத்துக்குச் செலுத்தப்படக்கூடிய வாறான அத்தகைய வேறு உதவு தொகைகளும்.*

(ஈ) *ஒழுங்குவிதிகளிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனை களுக்கமைய, பின்வருவனவற்றை நிதியத் திலிருந்து செலுத்துவதற்காக ஏற்பாடு செய்வதற்கும் :-*

(i) *(28 ஆம் அத்தியாயமான) தகவ லளிப்போர் வெகுமதிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தகவலளிப்போருக் கும் காட்டு அலுவலர்களுக்குமான வெகுமதிகளும் ;*

(ii) *காட்டு அலுவலர்களும், பொலிசு அலுவலர்களும் அல்லது வேறு அலுவலர்களும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தமது தத்துவங்க*

ளையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அவர்களுக்கு விளைவிக்கப்பட்ட உடலூறுபாட்டுக்கான நட்டஈடும் ;

(iii) அத்தகைய ஊறுபாட்டிலிருந்து இறப்பு விளையும்போது, அவர்களின் மரபுரிமையாளர்களுக்கான நட்டஈடும் ;

(iv) இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நீதிமன்றத்துக்கு வருகை தருவதில் முறையாக உறப்பட்ட பயணச் செலவுகளும் ;

(v) வெட்டுமரத்தைக் கள்ளமாக வெட்டிவீழ்த்துவதனையும், கள்ளமாக இடம்பெயர்ப்பதனையும் தடுப்பதற்கான திடீர்ச் சோதனைகளைக் கொண்டு நடாத்துவதற்கான செலவுகளும் ; அத்துடன்

(vi) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் காட்டு அலுவலர்கள் தமது கடமைகளை வினைத்திறனான முறையில் நிறைவேற்றுவற்கு அவர்களை இயலச் செய்வதற்காகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலுட்பட, காடு பாதுகாப்புச் செயற்பாடுகளில் உறப்பட்ட செலவுகள் ;

(உ) காட்டுத் திணைக்களத்தின் காட்டு அலுவலர்களின் நன்மைக்காகக் காப்புறுதித் திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கும்;

(ஊ) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பொதுவாக நிறைவேற்றுவதற்கும் ; இது, இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்துக்காக அல்லது அனுமதிப் பத்திரத்துக்காகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணவிதிப்பையும், அத்தகைய ஏதேனும் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கான அல்லது அறவிடுவதற்கான விதத்தையும் முறையையும் உள்ளடக்கும் ; அத்துடன்

(எ) ஒரு பேணற்காடு, ஒதுக்குக்காடு அல்லது கிராமியக் காடு தவிர்ந்த வேறு ஏதேனும் காட்டினுள் பின்வரும் விடயங்கள் தொடர்பில் :-

(i) அக்காட்டினுள் செயற்படுத்தவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் கட்டணங்களை அல்லது இறுப்புக்களை விதித்தல் ;

(ii) முகாமை உடன்படிக்கைகளின் நோக்கம், நோக்கெல்லை மற்றும் பரப்பளவு என்பவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைமுறை உட்பட, சமுதாய மற்றும் தனியார்துறைப் பங்குபற்றுகையுடன், தரங்குறைந்துள்ள காட்டு இடப்பரப்புகளைப் பேணும் மற்றும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காகச் செயற்படுத்தப்படவேண்டிய செயற்பாடுகள் ;

(iii) அத்தகைய உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதலும், அவற்றை இல்லாதாக்குதலும், நிபந்தனை

களைச் சுமத்துதலும், கட்டணங்களை விதித்தலும் மற்றும் அத்தகைய காட்டை முகாமை செய்தல் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கான உத்திகளை வகுத்தமைத்தலும் ;

(iv) முகாமைப் பங்காளர்களுக்கும் அல்லது அக்கறை கொண்டுள்ளோருக்கும் இடையே நன்மையைப் பகிர்ந்தளிக்கின்ற அமைப்பு முறையொன்றை அபிவிருத்தி செய்தல் ;

(v) அத்தகைய காட்டிலுள்ள காட்டு விளைபொருளை ஏதேனும் இடப் பிரதேச சமுதாயத்தினர் பயன்படுத்துவதனை அதிகாரமளிப்பதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும் அதற்கு ஏற்புடையற்பாலனவான நிபந்தனைகளும் ;

(vi) காட்டினுள் ஏதேனும் செயற்பாட்டுக்கு ஏற்புடையற்பாலனவான நிபந்தனைகள் ; அத்துடன்

(vii) ஏதேனும் விஞ்ஞான ஆராய்ச்சி எந்த இடப்பரப்புகள் தொடர்பிலும் எந்த நிபந்தனைகளுக்கமையவும் அனுமதிக்கப்படலாமோ அந்த இடப்பரப்புகளும் நிபந்தனைகளும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் ஒரு மாத்தினுள், அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(5) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 64அ, 64ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**39**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 64அ, 64ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"குற்றப் பணத்தின் பங்கை நிதியத்துக்குச் செலுத்தும்படி நீதிமன்றம் பணித்தல்.

64அ. நீதிமன்றமானது,-

(அ) தவறொன்று குற்றப்பணமொன்றை விதித்தல் தொடர்பானதாகவிருக்குமிடத்து, அத்தகைய குற்றப்பணத்தொகையின் ஓரரைவாசிக்குக் குறையாததற்குச் சமமான தொகையொன்று ; அத்துடன்

(ஆ) தவறொன்று புரியப்படுதல் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களைப் பறிமுதல் செய்வது தொடர்பானதாக அத்தவறானது இருக்குமிடத்து, அத்தகைய வாகனத்தின் விற்பனையிலிருந்து அறவிடப்பட்ட வரும்படிகளின் ஓரரைவாசிக்குக் குறையாததற்குச் சமமான தொகையொன்று,

இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட காட்டுத் திணைக்கள நிதியத்துக்கு வரவுவைக்கப்படவேண்டுமெனப் பணிக்கலாம்.".

நிதியத்திலுள்ள பணங்கள் எந்நோக்கத் துக்காகப் பயன்படுத்தப் படலாமென்பது.

*64ஆ.* (1) நிரந்தரமாக, முழுமையாக அல்லது பகுதியளவில் உடலியலாமைக்குட்பட்ட அல்லது தற்காலிகமாக உடற்குறைபாட்டுக்குட்பட்ட எவரேனும் காட்டு அலுவலருக்கு அல்லது எவரேனும் காட்டு அலுவலர் இறக்கும் பட்சத்தில், சட்ட மரபுரிமையாளர்களுக்கு, விடயத்துக்கேற்ப, அத்தகைய உடலியலாமை, உடற்குறைபாடு அல்லது இறப்பு –

(அ) கடமை புரிகையில் அத்தகைய அலுவலரினால் உறப்பட்ட ; அல்லது

(ஆ) (i) கடமைக்கு வருகை தருவதற்குத் தமது வதிவிடத்திலிருந்து தமது வேலைத் தலத்துக்கான ; அல்லது

(ii) கடமைபுரிந்த பின்னர் தமது வேலைத்தலத்திலிருந்து தமது வதிவிடத்துக்கான,

பயணத்தின்போது அத்தகைய அலுவலரினால் உறப்பட்ட ; அல்லது

(இ) கடமையில் இல்லாதபோது தமது சாதாரண கடமைகளின் நோக்கெல்லையினுள் உள்ள ஏதேனும் செயலைப் புரிகையில் அத்தகைய அலுவலரினால் உறப்பட்ட ; அல்லது

(ஈ) தமது கடமைகளை நிறைவேற்றுகையிலான ஏதேனும் செயலின் அல்லது செயல்நிறைவேற்றத்தின் விளைவாக அத்தகைய அலுவலரினால் உறப்பட்ட ; அல்லது

(உ) தமது கடமைகளை நிறைவேற்றுகையில் அவரினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையினால் ஏற்படுத்தப்பட்ட

அல்லது அதிலிருந்து எழுகின்ற, ஏதேனும் பழிவாங்கற் செயலின் விளைவாக அத்தகைய அலுவலரினால் உறப்பட்ட,

ஊறுபாடு காரணமாக இருக்குமிடத்து, நட்டஈடு வழங்கும் நோக்கங்களுக்காக நிதியமானது பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒரு காட்டு அலுவலரின் உடலியலாமை, உடற்குறைபாடு அல்லது இறப்புத் தொடர்பில் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்படும் ஏதேனும் நட்டஈடானது, ஓய்வூதியம் பற்றிய குறிப்புகளின்கீழ் அல்லது அதற்கேற்புடையதான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அத்தகைய உடலியலாமை, உடற்குறைாபடு அல்லது இறப்பு என்பன தொடர்பில் வழங்கப்படும் ஏதேனும் ஓய்வூதியத்துக்கு, பணிக்கொடைக்கு, நட்டஈட்டுக்கு, படிக்கு அல்லது வேறு நன்மைக்கு மேலதிகமானதாக இருத்தல் வேண்டும்.".

**40**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவு, அப்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"விதிகள். 65. இக்கட்டளைச் சட்டத்தினால் செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்ற கருமங்கள் தொடர்பில் அமைச்சர் விதிகளை ஆக்கலாம் அல்லது அங்கீகரிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும் ;

**41**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு, "ஒதுக்குக் காடொன்றில் அல்லது கிராமியக் காடொன்றில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பேணற் காடொன்றில் அல்லது ஒதுக்குக் காடொன்றில், கிராமியக் காடொன்றில் அல்லது அவ்வகுதிகளில் உள்ளடக்கப்படாத ஏதேனும் காட்டில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 67அ என்னும் புதிய உட்பிரிவை உட்புகுத்துதல்.

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 67அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

“தகவலளிப் போருக்கான வெகுமதி.

67அ.(அ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு தொடர்பாகத் தன்னிச்சையான தகவலை ;

(ஆ) ஏதேனும் காட்டினுள் ஏற்படுகின்ற ஏதேனும் நெருப்பைத் தணிப்பதில் தன்னிச்சையான உதவியை,

எவரேனும் ஆட்கள் வழங்குமிடத்து, காட்டைப் பாதுகாப்பதற்கான வெகுமதிகளாக அத்தகைய ஆட்களுக்குக் காட்டுத் திணைக்கள நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டிய பணத்தொகையைக் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களுக்கிணங்கத் தீர்மானித்தல் காடு பேணுநர்-தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 77 ஆம் பிரிவை நீக்குதல்.

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) “விலங்கு” என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

“விலங்கு” என்பது, வாழ்க்கைப்படிநிலையின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் எக்கட்டத்திலுமுள்ள விலங்கினக்கூட்டத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு என்று பொருளாகும்;

(2) "கால்நடை" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக் கணத்தில், "யானைகள், எருமைகள், குதிரைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "யானைகள், எருமை கள், எருதுகள், குதிரைகள்," என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) "வகுப்பாக்கல் குறி" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"வகுப்பாக்கல் குறி" என்பது, வெட்டுமரத்தின் மூலத்தை, அல்லது அது எந்த முகவர் நிலை யத்தினால் கைமயாளப்பட்டுள்ளதோ அந்த முகவர்நிலையத்தை அத்துடன் அத்தகைய வெட்டுமரம் எந்த வகுப்பைச் சேர்ந்ததோ அந்த வகுப்பைக் குறித்துக்காட்டுவதற்கு அதன்மீது இடப்படும் ஒரு குறி என்று பொருளாகும்;

(4) "பேணற் காடு" என்ற சொல்லமைப்புக்கான வரை விலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக் கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

"மாவட்டச் செயலாளர்" என்பது, ஒரு நிருவாக மாவட்டத்துக்குப் பொறுப்பாகவுள்ள மாவட்டச் செயலாளர் என்று பொருளாகும் ;

"பிரதேச செயலாளர்" என்பது, பிரதே செயலாளர் பிரிவொன்றிற்குப் பொறுப்பாகவுள்ள பிரதேச செயலாளர் என்று பொருளாகும்;

(5) "காட்டு அலுவலர்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"காட்டு அலுவலர்" என்பது, காடு பேணுநர் தலைமை யதிபதி, காடு பேணுநர், சிரேட்ட பிரதிக் காடு பேணுநர், பிரதிக் காடு பேணுநர், உதவிக் காடு பேணுநர், பிரதேசக் காட்டு அலுவலர், மேலதிகப்

பிரதேச காட்டு அலுவலர், உதவிப் பிரதேசக் காட்டு அலுவலர், விசேட காட்டு காவலர், காவலர், வலயக் காட்டு அலுவலர், மேலதிக வலயக் காட்டு அலுவலர், நடமாட்டக் காட்டு அலுவலர், காட்டு வெளிக்கள உதவியாளர், காட்டுக் காவற்காரர், காட்டுத் தொழிலாளர், பெருந்தோட்டத் தொழிலாளர் என்போராக விருப்பதற்குப் பெயரினால் அல்லது பதவி யொன்றை வகிக்கின்றவராக நியமிக்கப்பட்ட எவரேனுமாள் மற்றும் இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப் படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது விதியின்கீழ், காட்டு அலுவலரொருவரின் ஏதேனும் பணியை ஆற்றுவதற்குப் பெயரினால் அல்லது பதவியினால் நியமிக்கப்பட்ட வேறெவ ரேனுமாள் என்று பொருளாகும்;

(6) "காட்டு விளைபொருள்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில் -

(அ) "பசை, மைரபோலன்சு" என்னும் சொற்களிலி ருந்தான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "பசை, மைரபோலன்சு மற்றும் தாவரங்கள், விலங்குகள், பறவைகள் என்பவற்றிலிருந்து பெறப்படுபவைகள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவ தன்மூலமும் :-

"(இ) தந்தங்கள், கொம்புகள், இற்றுவீழ்ந்த கொம்புகள், உண்ணத்தக்க பறவை களின் கூடுகள், விலங்குத்தோல் மற்றும் விலங்குகளின் பாகங்கள்;";

(இ) அதன் (ஈ) என்னும் பந்தியில் "பாறைகள், கனிப்பொருட்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பாறைகள், கனிப்பொருட்கள், மணல்,

கற்கள், இரத்தினக்கற்கள் அல்லது இரத்தினக் கற்குழிகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மண்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஈ) அதன் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(உ) இயற்கை ஊற்றுக்கள், நீரூற்றுக்கள் என்பவற்றிலிருந்தான நீரும் மற்றும் நீரின் ஏனைய இயற்கைவளங்களும்;";

(7) "காட்டு விளைபொருள்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"கிராம அலுவலர்" என்பது, ஒரு கிராம அலுவலர் பிரிவிற்குப் பொறுப்பாகவுள்ள கிராம சேவை அலுவலர் என்று பொருளாகும்;

(8) "அரசாங்க அதிபர்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன்மூலமும் ;

(9) "தலைமைக்காரர்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன்மூலமும் ;

(10) "மறியற்றண்டனை" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

" "ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்றையும் உள்ளடக்கும்;";

(11) "தாவரம்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

“ “தாவரம்” என்பது, நிலத்தாவரங்களினதும் மற்றும் நீர்த் தாவரங்களினதும் வாழ்க்கைப் படிநிலையின் ஏதேனும் பாகம் உட்பட, தாவர வர்க்கத்தைச் சேர்ந்த ஏதேனும் தாவரம் என்று பொருளாகும் என்பதுடன், மரவகையான அல்லது வேறுவகையான ஏறுகொடிகளையும் அல்லது படர் கொடிகளையும், மரங்களையும், சிற்றிலைப் படர்செடி இனங்களையும், மரப்பாசிகளையும், ஈரினச் செடி ஒட்டுகளையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தையும், விதையையும், பழத்தையும் அல்லது பூக்களையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தையும் உள்ளடக்கும்;”;

(12) “பொலிசு அலுவலர்” என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

“ “பொலிசு அலுவலர்” என்பது, (53 ஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவரும், விடயத்துக்கேற்ப, கிரமமான சேவையில், ஒதுக்குச்சேவையில் அல்லது விசேட செயலணியில் பொலிசுத் திணைக்களத்தில் சேவையாற்றுகின்றவருமான எவரேனும் அலுவலர் என்று பொருளாகும்;”;

(13) “ஆறு” என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

“ “அரச காணி” என்பது, (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் வரைவிலக்கணங்கூறப்பட்ட ஏதேனும் காணி என்று பொருளாகும் ; ”;

(14) “வெட்டுமரச்சாலை அல்லது வெட்டுமரக்காலை” என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில், அதன் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

" "வெட்டுமரச்சாலை" ஒன்று, ஏதேனும் விறகுச்சாலையையும், தளபாடங்கள் அல்லது மரத்தினாலான பொருட்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்படும் ஏதேனும் கடையையும் அல்லது காட்சியறையையும், இயந்திரங்களைப் பயன்படுத்தி அல்லது வேறு வகையாகத் தச்சுவேலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் இடத்தையும், ஏதேனும் வெட்டுமர விற்பனை நிலையத்தையும் நிலத்தோடு பொருத்தப்பட்ட அல்லது வேறுவகையான ஏதேனும் வெட்டுமர அரியாலையையும், அல்லது வெட்டுமரப் பதனிடுகை, செய்முறைப்படுத்துகைத் தொழிற்சாலையையும் உள்ளடக்கும். கையுழவுயந்திரமொன்று, நடமாட்ட வெட்டுமர அரியாலையாகப் பயன்படுத்தப்படின், அதனையும் உள்ளடக்கும். அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரினால் சட்டப்படியாக வழங்கப்பட்ட ஓர் அனுமதிப் பத்திரத்தின்மீது நிருமாண அமைவிடமொன்றுக்குக் கொண்டுவரப்பட்ட வெட்டுமரத்தைப் பயன்படுத்தி மரத்தினாலான பொருட்களாகத் தயாரிக்கப்படும் அல்லது மரம் உருவமைக்கப் படுத்தப்படும் அத்தகைய அமைவிடத்திலுள்ள ஏதேனும் தற்காலிகத் தச்சுவேலைக்கடையை அது உள்ளடக்காது;"; அத்துடன்

(15) "மரம்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன்மூலமும் :-

" "மரம்" என்பது, மூங்கில்கள், அடிக்கட்டைகள், மற்றும் புதர்ச்செடிகள், புல்லினச் செடிகள், பிரம்புகள், படர்கொடிகள், மரஞ்சார்ந்த அல்லது வேறு வகையான ஏறுகொடிகள் என்பவற்றையும் மற்றும் அவற்றின் வளர்ச்சியினது எல்லாப் கட்டங்களிலுமுள்ள நாணல்களையும் மரங்களையும் உள்ளடக்கும் ;

"வாகனம்" என்பது, படகு, கைவண்டிகள், மோட்டார் வாகனம், உழவுயந்திரம், இழுவைவண்டி, சரக்கனுப்பும் கடகம், கட்டுமரத்தோணி, நீராவிப் படகு அல்லது மோட்டார்மயமாக்கப்பட்ட அல்லது வேறுவகையான ஏதேனும் போக்குவரத்து முறை என்பவற்றை உள்ளடக்கும்.".

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**45**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக் கத்திலுள்ள அட்டவணை களை மாற்றீடு செய்தல்.*

**46**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை III, அட்டவணை IV என்பன இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணைகள் இடப்படுகின்றன :-

"**அட்டவணை** III — பிரிவு 74

காட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ............................ என்னுமிடத்தைச் சேர்ந்த ............................ என்பவரிடமிருந்து ............................ ரூபாவான பணத்தொகை அரசுக்கு வருமதியாக இருந்ததாதலாலும், சொல்லப்பட்ட பணத்தொகை சொல்லப்பட்ட ............................ என்பவரினால் செலுத்தப்படாதுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட ............................ என்பவரின் ஆதனமாகவுள்ள ............................ காணி, சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இயையக் கைப்பற்றப்பட்டு, அதற்கு இயையவே ............................ ஆம் ஆண்டு ............................ மாதம் ............................ ஆம் நாளன்று விற்பனை செய்யப்பட்டதாதலாலும், சொல்லப்பட்ட ............................ என்பவரினால் உரியமுறையில் செலுத்தப்பட்டுள்ள ............................ ரூபாவான பணத்தொகைக்காக ............................ என்னுமிடத்தைச் சேர்ந்த ............................ என்பவரினால் காணியானது கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாதலாலும்,

சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் அதற்கென எனக்குரித்தாக்கப் பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டும் அவற்றைப் பிரயோகிக்கையிலும், மாவட்டச் செயலாளர் ............................ ஆகிய நான், பின்வரும் ஆதனம், (இங்கே எல்லைகள் பற்றிய விசேட செம்மைத்திட்பத்துடன் விவரிக்கப் பட்டுள்ளது) அவரால் உரியமுறையில் செலுத்தப்பட்ட ............................ ரூபாவான பணத்தொகைக்காகச் சொல்லப்பட்ட ............................ என்பவருக்கு விற்பனை செய்யப்பட்டு அவரினால் கொள்வனவு செய்யப்பட் டுள்ளதென்றும், சொல்லப்பட்ட வளவுகள் சொல்லப்பட்ட ..........

.................... என்பவருக்கும், அவரது மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள், நிருவாகிகள், சாட்டுதற்காரர்கள் என்போருக்கும், வில்லங்கங்கள் எவையுமின்றி உரித்தாக்கப்படுகின்றனவென்றும், இதுமுதல் அவ்வாறு உரித்தாக்கப்பட்டனவாயிருக்குமென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன் என இத்தால் சகலரும் அறிவீராக,

.............................. ஆம் ஆண்டு .............................. மாதம் .............................. ஆம் நாளாகிய இன்று எனது கைப்பட வழங்கப்பட்டது.

(ஒப்பம்) ..............................
**மாவட்டச் செயலாளர்**

**"அட்டவணை IV** பிரிவு 75

காட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் .............................. என்னுமிடத்தைச் சேர்ந்த .............................. என்பவரிடமிருந்து .............................. ரூபாவான பணத்தொகை அரசுக்கு வருமதியாக இருந்ததாதலாலும், சொல்லப்பட்ட பணத்தொகை சொல்லப்பட்ட .............................. என்பவரினால் செலுத்தப்படாதுள்ளதாதலாலும்,

அத்துடன், சொல்லப்பட்ட .............................. என்பவரின் ஆதனமாகவுள்ள .............................. காணி, சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்துக்கு இயையக் கைப்பற்றப்பட்டு, .............................. ஆம் ஆண்டு ............................ மாதம் ............................ ஆம் நாளன்று அதற்கியையவே விற்பனை செய்யப்பட்டதாதலாலும், அரசுக்கு வருமதியாகவுள்ள .............................. ரூபாவான பணத்தொகையின் ஒரு பாகத்தை (அல்லது விடயத்துக்கேற்ப முழுவதையும்) செலுத்துவதில் இலங்கை அரசாங்கத்துக்கு வரவு வைக்கப்பட்டுள்ள ரூபாப் பணத்தொகைக்காக, ...................................மாவட்டச் செயலாளரினால் அது கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாதலாலும்,

சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் அதற்கென எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டும் அவற்றைப் பிரயோகிக்கையிலும், மாவட்டச் செயலாளர் .............................. ஆகிய நான், பின்வரும் ஆதனம், (இங்கே எல்லைகள் பற்றிய விசேட செம்மைத்திட்பத்துடன் விவரிக்கப்பட்டுள்ளது) .............................. ரூபாவான பணத்தொகைக்காக அரசுக்காகவும் அதன் சார்பிலும் சொல்லப்பட்ட .............................. மாவட்டச் செயலாளருக்கு விற்பனை செய்யப்பட்டு, அவரினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதென்றும், சொல்லப்பட்ட அப்பணத்தொகை மேற்கூறப்பட்டவாறு அரசுக்கு உரியமுறையில் வரவுவைக்கப்பட்டுள்ளதென்றும், சொல்லப்பட்ட வளவுகள் வில்லங்கங்கள் எவையுமின்றி அரசுக்கு உரித்தாக்கப்படுகின்றனவென்றும், இதுமுதல் அவ்வாறு உரித்தாக்கப்பட்டனவாயிருக்குமென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன் என இத்தால் சகலரும் அறவீராக.

.............................. ஆம் ஆண்டு .............................. மாதம் .............................. ஆம் நாளாகிய இன்று எனது கைப்பட வழங்கப்பட்டது.

(ஒப்பம்) ..............................
**மாவட்டச் செயலாளர்**

**அட்டவணை V**

முதன்மைச் சட்டவாக்கம், நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட பிரிவுகளில், நிரை II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொல்லுக்கு அல்லது சொல்லமைப்புக்குப் பதிலாக அட்டவணையின் நிரை III இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொல்லை அல்லது சொல்லமைப்பை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

| *நிரை I* | *நிரை II* | *நிரை III* |
|---|---|---|
| 4 | அரசாங்க அதிபர் | மாவட்டச் செயலாளர் |
| 24(1) | இலங்கை | இலங்கை |
| 49(அ) | அரசாங்க அதிபர் | மாவட்டச் செயலாளர் |
| 53(அ) | அரசாங்க அதிபர் | மாவட்டச் செயலாளர் |
| 57 | அரசாங்க அதிபர் | மாவட்டச் செயலாளர் |
| 72 | அரசாங்க அதிபர் | மாவட்டச் செயலாளர் |
| 73 | அரசாங்க அதிபர் | மாவட்டச் செயலாளர் |
| 74 | அரசாங்க அதிபர் | மாவட்டச் செயலாளர் |
| 75 | அரசாங்க அதிபர் | மாவட்டச் செயலாளர் |

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*